
# 7 திருமணச் சடங்கு

ஓர் இனத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்பு சடங்குகளாகும். வழிவழியாக வரும் மரபுகளைக் காத்தல் மனித இனத்தின் வேரூன்றிய செயலாகும். சடங்குகள் இப்பணிக்குப் பெரிதும் உதவுகின்றன. உண்மையான உணர்வுடன் மனம் ஒன்றிச் செயற்பட்டால் விரைவில் பயன்தருவது என்னும் கருத்திலேதான் சடங்குகள் செய்யப்பட்டன என பெரியோர் தெரிவிக்கின்றனர். நம் முன்னோர் செய்த செயல்களைக் காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கின் முறையாகும். சடங்குகள் நிகழ்த்தப்படாவிட்டால் எடுத்த காரியம் நன்று நிறைவேறாது என்பது எமது மக்களின் நம்பிக்கையாகும். எமது வாழ்க்கையில் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை சடங்குகள் பின்னிப் பிணைந்துள்ளன. வாழ்க்கையில் இன்பத்தைப் பெற்றுக்கொள்ளல், துன்பத்தைப் பகிர, கடமைகளை உணர்ந்து செயலாற்றி வாழ்வை பயனுள்ளதாக்க ஒருவருக்கொருவர் உதவவும், உறவுகளை வலுப்படுத்தவும் சடங்குகள் உதவுகின்றன. இவ்வகையில் சமயச் சடங்குகள், பிறப்பு சம்பந்தமான சடங்குகள், திருமணச் சடங்குகள், ஈமச் சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள் என்பன வாழ்வியல் சடங்குகளாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் திருமணச் சடங்கு பற்றிக் கற்போம்.

## திருமணச் சடங்கு

சைவ சமய மரபில் திருமணச் சடங்கு மிக முக்கியமான சடங்காகும். இது பற்றிய விடயங்கள் சைவ இலக்கியங்கள் (சைவக் கிரியை விளக்கம்) பலவற்றிலும் தெளிவாகக்கூறப்பட்டுள்ளன. அவ்வாறான திருமணச் சடங்குகளே இன்னும் பெரிதும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத்திருமணச் சடங்கில் திருமண நிச்சயம், திருமணப்பதிவு, பொன்னுருக்கல், மணப்பந்தல், மணமகனை மங்கல நீராட்டல், மணமகளை மங்கல நீராட்டல், மாப்பிள்ளை அழைத்தல், மணமேடை, ஆரம்பக் கிரியை, அங்குரார்ப்பணம், இரட்சா பந்தனம், மணமகன் வருகை, பிதிர் ஆசீர்வாதம், கன்னிகாதானம், மங்கல நாண் பூட்டுதல், மாலை மாற்றுதல், பால் பழம் புசித்தல், பசு தரிசனம், பாணிக்கிரகணம், ஏழடி வைத்து நடத்தல், அம்மி மிதித்தல், கணையாழி எடுத்தல், அருந்ததி காட்டல், பூர்ணாகுதி, ஆசீர்வாதம், பூதாக்கலம் உண்ணல், மணமக்களை மணமகன் வீட்டில் வரவேற்றல் போன்ற சடங்குகள் இடம் பெறுகின்றன.



## திருமண நிச்சயம்


பெற்றோர், தம் பிள்ளை பருவம் அடைந்ததும் அவர்கள் வாழ்வின் உறுதிப் பொருளான அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைப் பெறுதற்குரியதாகிய இல்லறத்தை மேற்கொள்ள திருமணத்தை செய்து வைக்க வேண்டும். இதுவரை மாணவப் பருவமாகிய பிரம்மச்சரியத்தில் இருந்த தம் பிள்ளைகள் தம் சந்ததி விருத்தியின் பொருட்டும், தம் முன்னோர் நற்கதியடையும் பொருட்டும், அறம் முதலான பணிகளைச் செய்வதற்காகவும் திருமணம் செய்தல் வேண்டும். இருமனம் கருத்தொருமித்து ஒருமனதாய் திருமணம் அமைதல் வேண்டும்.

ஒத்த பண்பும் ஒத்த வயதும் கல்வியும் ஒத்த உடல் வளமும் உள நலமும் ஒத்த உணர்வுகளும் நல்வாழ்வுக்கேற்ற சாதகப் பொருத்தமும் பார்த்து, திருமணம் நிச்சயிக்கப்படும். மணமக்களும் ஒருவரை ஒருவர் அறிந்து பார்த்துப் விரும்பிச் சம்மதித்தல் முக்கியமாகும். இரு பகுதியர்க்கும் பூரண திருப்தி எனக் கண்டதன் பின் சோதிடர் மூலமாக இருவருக்கும் பொருத்தமான சுப நாளில் திருமணப் பதிவு, பொன்னுருக்கல், திருமணம் என்பவற்றுக்கு நாள் குறிக்கப்படும். திருமணக் கருமங்கள் பற்றி இருபகுதியாரும் மனம்விட்டு கதைத்துச் சம்பந்தம் கலத்தல் ஆகிய மனம் கலந்து மகிழ்ச்சிக்கு அடையாளமாக விருந்துண்டு மகிழ்வர்.

## திருமணப்பதிவும் பொன்னுருக்கலும்

திருமணப்பதிவுச் சட்டப்படி திருமணம் செய்வதற்குரிய நன்னாளில் பதிவாளரால் மேற்கொள்ளப்படும். இது வசதி போல திருமணத்தின் முன்போ அல்லது திருமண நாளன்றோ இடம்பெறும். மணமக்கள் திருமணத்திற்குச் சம்மதம் தந்து ‘ஒருவரை ஒருவர் எக்காலத்தும் காத்து ஈருடற்கோருயிராய் வாழ்வோம்’ என உறுதி செய்வதாகும். இதன் பின் மணமகன் வீட்டில் பொன்னுருக்கல் இடம்பெற்று கன்னிக்கால் நடுதல் நிகழும், நேரிய முள் முருங்கைத் தடியை (கமுகம் கன்று, கரும்பு, தென்னம்பிள்ளை என்பனவும் இப்போது பயன்படுத்தப்படுகின்றன.) மணமகன் வீட்டில் வடகிழக்கில் நட்டு அதற்கு மாவிலை, பட்டுக்கட்டி அதன் அடியில் பாத்திபோலச் செய்து பாலுடன் சேர்த்து நவதானியம் தூவித் தீபாராதனை செய்வார். இதே போல் மணமக்கள் வீட்டிலும் கன்னிக் கால் நடும் வழக்கமும் உண்டு.

## மணப்பந்தலும் மங்கல நீராட்டலும் மணமகள் அழைத்து வரப்படுதலும்.



இரு வீட்டார் முற்றத்திலும் பந்தல் (கொட்டகை) அமைத்து வெள்ளை கட்டி (இப்போது வழக்கில் இல்லை) பழ வாழைக்குலை, மாவிலை, தோரணங்கள், பூமாலை முதலியவற்றால் அலங்காரம் செய்து கிழக்கு முகமாக மணவறை அமைக்க வேண்டும். தற்பொழுது திருமண மண்டபங்களில் திருமணம் நடைபெறுவதால் மண்டப அலங்காரம் சிறப்பாக அமையும்.



மணப்பந்தல் அமைத்தபின் மணமகனுக்கும், மணமகளுக்கும் மங்கல நீராட்டல் சம்பிரதாயப் படி நடைபெற்று, மங்கல வாத்தியம் முழங்க மணமகள் மண மேடைக்கு அழைத்து வரப்படுவார்.

## மணமேடை

மணவறை கிழக்கு முகமாக அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் வட கிழக்கில் சுவாமி அம்பாள் கும்பமும், வட மேற்கில் சந்திரகும்பமும் சூழ, நவதானிய மண்சட்டியும், வடக்கில் அம்மியும், நடுவில் ஓம குண்டமும் விநாய பூசை, பஞ்ச கௌவிய பூசைக்கான ஒரு கும்பமும் தென்மேற்கில் நவக்கிரக கும்பமும், கிழக்கில் அரசாணியும் சூழ நான்கு கும்பமும் குத்து விளக்கும் அதற்கு கிழக்கில் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றும் அமைந்திருக்கும்.

## ஆரம்பக் கிரியையும் அங்குரார்ப்பணமும்

மணமகனுக்குத் திருநீறு கொடுத்து அணியச் செய்து வலது மோதிர அணி விரலில் தர்ப்பை (பவித்திரம்) அணிவித்து சிவாசாரியார் சங்கற்பம் செய்வார். பின்னர் விநாயகர் பூசை, புண்ணியாகாசனம், பஞ்ச கௌவிய பூசை செய்து மண்டபத்தையும் திரவியங்களையும் தூய்மைப்படுத்தி மணமகனுக்குப் பஞ்ச கௌவியம் பருகக் கொடுப்பர். நவதானியத்தை பாலுடன் சேர்த்து மண் நிறைந்த சட்டியில் போடுதல் அங்குரார்ப்பணம் எனப்படும். குடும்பத்தில் சந்திரனைப் பூசித்து பின் மணமகன் உறவினரில் மூன்று சுமங்கலிகளை அழைத்து விபூதி அணிவித்து அவர்கள் மூலமாக நவதானியம் போடச் செய்வர்.

## இரட்சாபந்தனம் (காப்பு கட்டுதல்)

எடுத்த கருமம் இடையீடின்றி இனிது நிறைவேறவும், இடையே தடை ஏற்படாதிருக்கவும் இரட்சாபந்தனம் செய்தல் வேண்டும். ஒரு தட்டத்தில் பச்சை அரிசி பரப்பி வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் வைத்து தேங்காய் மீது மஞ்சள் பூசிய நூலை வைத்து அந்நூலை கிரியாகுரு மணமகனின் வலது கை மணிக்கட்டில் கட்டுவர்.


## மணமகள் வருகை

மணமகள் முகத்தை மெல்லிய துணியால் மறைத்துத் தோழி முதலிய சுமங்கலியினர் , பெற்றோர், உறவினர் மணமகளை அழைத்து வந்து மணமகனுக்கு வலப்புறத்தில் இருத்துவர் மணமகளுக்கும் கிரியா குழு காப்புக்கட்டுவர்.

## பிதிர் ஆசீர்வாதம்

இல் வாழ்க்கையில் தவறின்றி நடத்தலுக்கு பிதிர்களைத் திருப்தி படுத்தும் பொருட்டும் அவர்களின் ஆசீர்வாதம் பெறும் பொருட்டும் சாந்தி சிரார்த்தம் செய்யப்படும். மணமகளின் பெற்றோர் மணமகனுக்கு இடப்புறத்தும் மணமகளின் பெற்றோர் வலப்புறத்தும் கிழக்கு முகமாக அமர்ந்திருக்க கிரியாகுரு பிதிர் ஆசீர்வாதம் செய்வார்.

## கன்னிகாதானம்



மணமக்களின் பெற்றோர் ஒருவருக்கொருவர் சந்தனத் திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்த பின்னர் மணமகளின் பெற்றோர் கிழக்கு முகமாக இருந்து மணமகளை கிழக்குமுகமாக வைத்து வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மஞ்சள், பொன், காசு, எலுமிச்சம் பழம் என்பவற்றுடன் பெண்ணின் கையை மணமகனின் கையிற் கொடுத்து இருவரின் தகப்பன், பேரன், பூட்டன் ஆகியோரின் பெயரைக்கூறி இந்தப் பெண்ணை இந்த ஆணிடம் ஒப்படைக்கிறேன் என்று பெண்ணின் தாயார் மூன்றுமுறை தண்ணீர்விட மங்கள வாத்தியம் முழங்க பெண்ணின் தந்தையார் பெண்ணை மணமகனிடம் ஒப்படைப்பர்.

## மங்கல நாண் பூட்டுதல் (தாலி கட்டுதல்)




கூறை உடுத்தி வந்த மணப்பெண் மணமகனுக்கு வலப்புறம் அமர்வார். முகூர்த்த குற்றம் நீங்குவதற்காக தானம் ஒன்று செய்யப்படும். மணமகன் எழுந்து பெண்ணிற்கு வலப்புறம் நின்று மணமகள் கழுத்தில் மங்கல நாண் பூட்டுவார். அவ்வேளை மங்க வாத்தியம் முழங்க சபையோர் மலர் தூவி ஆசீர்வதிப்பர். மணமகள் மணமகனுக்கு இடப்புறம் அமருவார்.

## மாலை மாற்றுதல்



உடலாலும் உள்ளத்தாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்துவது மாலை மாற்றுதல் ஆகும். மணமகள் கழுத்தில் அணிந்திருக்கும் பூமாலையை மணமகனுக்கும், மணமகன் கழுத்தில் அணிந்துள்ள மாலையை மணமகளுக்கும் மூன்று முறை அணிவிப்பர். மணமகள் மணமகனுக்கு இடப்புறம் அமருவார்.

## பால் பழம் புசித்தல்



தயிர், நெய், தேன், சர்க்கரை, வாழைப்பழம் ஆகியவற்றைக் கலந்து முதலில் மணமகள் மணமகனுக்கு மூன்றுமுறை உண்ணக் கொடுப்பார். பின் மணமகன் பெண்ணிற்கு மூன்றுமுறை உண்ணக் கொடுப்பார். வாழ்க்கை இனிமையானதாக அமைய வேண்டும் என்பதற்காக இது செய்யப்படுகின்றது.

## பசு தரிசனம் (கோ)




பசுவின் உடலில் சகல தேவர்களும் புண்ணிய நதிகளும் பிறவும் அமைந்திருப்பதாலும், நல்ல சகுனத்திற்காகவும் புதுமணத் தம்பதியினர் பசுவைத் தரிசனம் செய்வர். பசுவின் பின்புறத்தில் இலக்குமி வாசம் செய்வதால் பசு கிழக்கு நோக்கிய வண்ணம் நிற்க, மணமக்கள் இருதய மந்திரத்தால் பசுவின் பின்புறத்தைத் தரிசிப்பர். புது வாழ்க்கை ஆரம்பிக்கும்போது முதலில் மங்களகரமானதும் புனிதமானதுமாக இருக்க வேண்டும் என்று பசு தரிசனம் இடம்பெறுகிறது.

## பாணிக் கிரகணம்

பாணி என்பது கை. கிரகணம் என்பது பற்றுதல் அல்லது பிடித்தல் என பொருள்படும். இது கைப்பிடித்தல் எனப்படும். அக்கினி சாட்சியாகவும், பெரியோர், சபையோர் சாட்சியாகவும் நாம் கரம் பற்றியிருக்கிறோம். முதுமையடைந்தாலும் நாம் சேர்ந்தே இருப்போம் என்று மணமகள் கை கீழே நோக்கி அமையப் பிடித்தல் வேண்டும்.

## ஏழடி வைத்து நடத்தல்



மணமகன் மணமகள் கையைப் பிடித்து அக்கினிக்குப் பக்கத்தில் ஏழடி நடப்பர். இது இல்வாழ்க்கைக்குத் தேவையான ஏழு பொருட்களான உணவுப் பொருள், உடற் பலம், இறைவழிபாடு, மன அமைதி, அறிவு, காலத்திற்குக் காலம் வரும் பொருட்களும் அதனால் வரும் சுகமும் யாகாதிகருமங்களிற்கு வேண்டிய துணைகள் என்பவற்றைப் பெறுவதற்கு இருவரும் முயற்சி செய்வதற்கு வேண்டிய அருளைக் கடவுளிடத்தும் பெறுவதற்காகச் செய்யப்படும்.

## அம்மி மிதித்தல்



நான்கு மூலை விட்டமுள்ள ஒரு அம்மி வைத்து அதன் மேல் மணமகன் பெண்ணின் காலைத் தூக்கி வைத்து கால் நடுவிரலில் மெட்டி (மிஞ்சி) அணிவிப்பார். அம்மி மிதித்தலின் நோக்கம் பெண்ணானவள் கல்லைப் போல மனம் தளராது உறுதியுடன் தன்னுடைய நிலையினின்றும் பிரியாமலும் கணவனின் பற்று நீங்காமலும் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுவதாகும். அக்கினியை வலம் வந்து அதிலே நெற் பொரியிட்டு மீண்டும் அம்மியில் மணமகளின் காலைத் தூக்கி வைத்தல் நிகழும். மும்முறை அக்கினியை வலம் வந்த பின் குற்றங்கள் தீருவதற்காகப் பிரயாச்சித்த ஓமம் செய்யப்படும்.

### கணையாழி (மோதிரம்) எடுத்தல்



அக்கினியை வலம் வரும் பொழுது இந்நிகழ்வு இடம் பெறும். அரசாணிக்குக் கிழக்கே உள்ள மஞ்சள் நீர் நிரம்பிய பாத்திரத்தினுள் ஒரு மோதிரத்தை இட்டு இருவரில் ஒருவர் அதை எடுப்பர். வாழ்க்கையில் புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல் முதலியவற்றை அறிவுறுத்த இச் செயல் நடைபெறும்.

### அருந்ததி காட்டல்



கணவன், மனைவி அன்புடையவராகவும் தனவந்தராகவும் இருக்க விரும்பும் தம்பதியினர் அருந்ததியைத் தரிசிப்பர். இரவு நேரத்தில்தான் அருந்ததியைப் பார்க்க முடியும். பகல் வேளையில் நிகழும் திருமணத்தில் அதற்கென வைத்த கும்பத்திலே பூ போட்டு வணங்குவர். வசிட்டரும் அருந்ததியும் போல எடுத்துக்காட்டாகத் தம்பதியினர் வாழ வேண்டும் என அருந்ததி காட்டல் நிகழும்.

### பூர்ணாகுதி

கிரியாகுரு ஓமகுண்டத்தில் நெய்யைச் சொரியும் போது, மணமக்கள் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் தேங்காய், நெற்பொறி ,சமித்து முதலியவற்றை இடுவர். பின் தீபாராதனை செய்து ஓமக்கிளிச் சாம்பலை நெய்யுடன் குழைத்து, மணமக்கள் நெற்றியல் திலகமிடுவர்.

### ஆசீர்வாதம்

மணமக்கள் எழுந்து கிழக்கு முகமாக நிற்க கிரியாகுரு ஆசீர்வாத மந்திரம் கூறி மணமக்களை வாழ்த்துவர். பின்னர் மணமக்களின் பெற்றோரும் வயதில் மூத்த சபையோரும் மணமக்களை அறுகரிசியிட்டு வாழ்த்துவர். (அறுகரிசியை) இரு கை களாலும் எடுத்து மூன்றுமுறை உச்சியில் போட்டு வாழ்த்த வேண்டும். (அட்சதை என்பது முனை உடையாத பச்சை அரிசியும் மஞ்சள் தூளும் அறுகும் சேர்ந்த கலவையாகும்). வாழ்த்தும்போது 'ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி' வாழ வாழ்த்த வேண்டும்.

### பூதாக்கலம்

தலைவாழை இலையில் சாதத்தினை இட்டு, மணமகள் மணமகனுக்கு ஊட்டிய பின், மணமகன் மணமகளுக்கு ஊட்டுவார். இது அன்பினையும் அன்யோன்யத்தையும் குறிப்பதாகும்.



**மணமக்களை மணமகள் வீட்டில் வரவேற்றல்**

திருமணக் காட்சியின் நிறைவுப் பகுதியாக மணமக்கள் தமது குலதெய்வங்களை வணங்கி பின்னர், தமது இல்லத்திற்குச் செல்வர். அப்பொழுது சுமங்கலிப் பெண்கள் வீட்டு வாசலில் வைத்து ஆராத்தி எடுப்பர். பின்னர் வீட்டின் பெரியோர்களிடம் ஆசிர்வாதம் பெற்று, இல்லற வாழ்வைத் தொடங்குவர்.

**பயிற்சிகள்**

1. சடங்குகள் என்றால் என்ன?
2. உமக்குத் தெரிந்த வாழ்வியல் சடங்குகள் நான்கைப் பெயரிடுக.
3. பின்வருவனவற்றிற்குப் பொருள் கூறுக.

| | |
|---|---|
| மங்கல நாண் பூட்டுதல் | பாணிக்கிரகணம் |
| பூர்ணாகுதி | பூதாக்கலம் உண்ணல் |

**செயற்பாடு**

★ உமது ஊரில் நடைபெறும் திருமணச் சடங்கொன்றைப் பார்வையிட்டு, அங்கு இடம்பெறும் நிகழ்வுகளை அட்டவணைப்படுத்தி, அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

★ சடங்குகள் கரணங்கள் என்றும் அழைக்கப்படும்.

★ மரபு வழி வந்த சடங்குகளை அவ்விதமே நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

★ வாழ்க்கையில் இன்பம் பெறவும் துன்பத்தைப் பகிரவும் ஒருவருக்கொருவர் உதவவும் உறவுகளை வலுப்படுத்தவும் சடங்குகள் உதவுகின்றன.

★ சமயச் சடங்குகள் பிறப்புச் சம்பந்தமான சடங்குகள், திருமணச் சடங்குகள், ஈமச் சடங்குகள், வேளாண்மைச் சடங்குகள் மற்றும் பிற சடங்குகள் என்பன வாழ்வியல் சடங்குகளாக கருதப்படுகின்றன.

★ அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களை அடையத் திருமணச் சடங்குகள் நடத்தப்படுகின்றன.